අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ අංකය / எனது இல. / My Ref. ED/01/26/25/01/01 | ඔබේ අංකය / உமது இல. / Your Ref. | දිනය / திகதி / Date 2020.07.27

**சுற்றுநிருப இலக்கம் - 18/2020**

சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,

பிரதம ஆணையாளர் (ஆசிரியர் கல்வி நிர்வாகம்),

சகல விடயப் பணிப்பாளர்கள்,

சகல வலயக் கல்வி பணிப்பாளர்கள்,

சகல கல்வியியற்கல்லூரி பீடாதிபதிகள்,

சகல கோட்டக் கல்வி அதிகாரிகள்,

சகல அதிபர்கள்,

**பொதுக்கல்வியின் தொடர்பாக தேசிய கற்றல் சார் உள்ளடக்க முறைமையாக இ- தக்சலாவ கற்றல்சார் உள்ளடக்க முகாமைத்துவ முறைமையினை வெளிப்படுத்துதலும் பாவனையை பிரபல்யப்படுத்துதலும்.**

கல்வி அமைச்சினால், பாடசாலை முறைமை தொடர்பில் 2013 ம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட இ-தக்கசலாவ கற்றல்சார் உள்ளடக்க முகாமைத்துவக் முறைமை இன்றளவில் பாரிய சேவையினை ஆற்றி வருவதோடு அதனது தேவைப்பாடானது நன்றாக உறுதி படுத்தப்பட்டுள்ளது. எனவே, இலங்கையில் பொதுக்கல்வி முறையாக தேசிய உத்தியோகபூர்வ கற்றல்சார் உள்ளடக்க முறைமையான "இ-தக்கசலாவ" இதனூடாக வெளிப்படுத்தப்படுகின்றது.

http://www.e-thaksalawa.moe.gov.lk/எனும் இணைப்பினூடு பிரவேசிக்க முடியும்.

02. இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிறுவனத்தினால் (ஐஊவயு) நடாத்தப்படுகின்ற தேசிய மென்பொருள் மதிப்பீட்டிற்கான "ந-ஸ்வாபிமானி" போட்டியில் இ-தக்சலாவ 2015 ம் ஆண்டின் வெற்றியும், தென்னாசிய நாடுகளை மையப்படுத்தி இந்தியாவில் நடாத்தப்பட்ட "மாந்தன்" போட்டியில் பெற்றுக் கொண்ட வெற்றியும், இ- தக்சலாவ இலங்கையின் ஒட்டுமொத்த பொதுக்கல்வி முறைக்கு எந்தளவு பொருத்தப்பாடுடையது என்பது குறித்து சர்வதேச மட்டத்தில் பெற்றுக் கொடுக்கப்பட்ட சான்றாகும்.

03. COVID-19 தொற்றினால் பெரும்பாலான நாடுகளில் அரச பங்குபற்றலுடன் தயாரிக்கப்பட்ட இ-கற்றல் முறைமை தொடர்பில் ருNநுளுஊழு UNESCO மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக்கமைய தேசிய மட்டத்திலான கற்றல் முறைமையின் கீழ் இலங்கையில் நடை முறைப்படுத்தப்படுகின்ற உத்தியோகபூர்வ கற்றல் முறைமையாக இ-தக்கசலாவ சிபாரிசு செய்யப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

04. தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் மிகவும் வலுமிக்கதும் பரந்தளவிலான பண்புகளைக் கொண்டதுமான கற்றல் முகாமைத்துவ முறைமையாக இ-தக்கசலாவ ஏலவே நிறுவப்பட்டுள்தோடு கற்றல் முகாமைத்துவ முறைமைக்குரிய சகல பயன்பாடுகளையும் இந்த முறைமை கொண்டிருப்பதனால் எதிர்வரும் காலங்களில் மேற்கௌ்ளப்பட வேண்டிய ஒருங்குசேர் (Blended) கற்றல் முறைமையினை அறிமுகப்படுத்தும் கற்றல் முறைகளுக்கு இக்கட்டமைப்பினூடாக சந்நதர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

05. அதற்கமைய, கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் தங்களது கவனம் ஈர்க்கப்படுவதன் பொருட்டு இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது என்பதனை அறியத் தருகின்றேன்.

**5.1 இ- தக்சலாவ பாவனை**

மாகாண கல்விப் பணிப்பாளர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் உள்ளடங்கிய சகல நிறுவனத் தலைவர்களினால், தங்களது மாகாணம், வலயம் அல்லது நிறுவனத்தில் தனியான அல்லது முழுமையற்ற கற்றல் செயன்முறை உள்ளடங்கிய முறைமையினை உருவாக்குதவற்கு பதிலாக இ-தக்சலாவையை பயன்படுத்துதல் அத்தியாவசியமாவதோடு அதற்கான பங்களிப்பினை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இ-தக்சலாவ பாவனையை உத்தியோக பூர்வமாக பிரசாரம் செய்வதற்காக சகல பாடசாலைகள், ஆசிரியர் மத்திய நிலையங்கள், கணினி வள நிலையங்கள், ஆசிரியர் மத்திய நிலையங்கள் மற்றும் கல்வியியற் கல்லூரிகளில் பொருத்தமான வேலைத்திட்டங்களை நிறுவனத் தலைவர்கள், விடயத்துறை பணிப்பாளர்கள், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் உரிய அலுவலர்களினால் பேணப்படல் வேண்டும்.

தேசிய கல்வியியற் கல்லூரியில் கல்வி பயிலும் 2020 வது கல்வி ஆண்டிற்கு புதிதாக உள்ளீர்க்கப்படும் முதிழ்நிலை ஆசிரியமாணவர்களுக்கு தங்களுக்குரிய 03 வருட கற்றல் நடவடிக்கைகளில் பயன்படுத்த இ- தக்சலாவ கற்றல் முகாமைத்துவவும் மெய்நிகர் கற்றல் பிரதேசமும் வழங்குவதற்கு நடவடிக்கை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது. தேசிய கல்வியியல் கல்லூரியினுடைய அனைத்து விரிவுரையாளர்களுக்கும், மாணவர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள மெய்நிகர் வெளியை (Virtual Space) அதி உச்சமாக அவர்கள் பயன்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கு அனைத்து பீடாதிபதிகளும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

**5.2 இ- தக்கசலாவ உள்நுழையும் சந்தர்ப்பங்களை விஸ்திரணப்படுத்துதல்**

பாடசாலை, கணினி வளநிலையங்கள், ஆசிரியர் மத்திய நிலையங்கள், மற்றும் கல்வியியற் கல்லூரிகளில் இ-கற்றல் தொடர்பாக நடைமுறைப் படுத்தப்படுகின்ற எந்தவொரு செயற்பாடு அல்லது கருத்திட்டம், இ-தக்சலாவ உத்தியோக பூர்வ கற்றல்சார் முகாமைத்துவக் முறைமையினை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்துதல் அவசியமானதாகும். நிகழ்நிலை கற்றல் செயன்முறையின் பொருட்டு மாணவர்கள் பயன்படுத்தக் கூடிய வகையில் இ-தக்சலாவ கட்டமைப்பினுள் தேவையான வசதிகள் தயாரிக்கப்பட்டு வருவதோடு அக்கட்டமைப்பினை மாகாண மட்டங்களில் நடைமுறைப்படுத்த ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் பாடசலையினால் ஏற்பாடு செய்யப்படுகின்ற மாணவர் மற்றும் ஆசிரியர்களுக்கு இடையான இ-கற்றல் தொடர், இணையவழி வகுப்பறை ஆகிய மெய்நிகர் (virtual) நிகழ்ச்சித்திட்டங்களை இ-தக்சலாவ இணையவழி கற்றல்சார் முகாமைத்துவ முறைமையினை நடைமுறைப்படுத்துத்தல் அவசியமானதாகும்.

**5.3 இ-தக்சலாவின் உள்ளடக்கங்களின் வடிவமைப்பிற்கு ஒத்துழைத்தல்**

தங்களது நிறுவனம், அரச நிதியினைப் பயன்படுத்தி உருவாக்குகின்ற சகல மின்னணு உள்ளடக்கம் அல்லது வினாப்பத்திரங்களின் பிரதியொன்றினை இ-தக்சலாவையில் உட்சேர்க்கும் பொருட்டு பரிசீலனை செய்வதற்காக கல்வி அமைச்சுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

அனைத்து பாடசாலைகளினாலும் தயாரிக்கப்படுகின்ற வார இறுதிப் பரீட்சைகளின் சகல வினாப்பத்திரங்களும், பரீட்சை முடிவடைந்து ஒரு மாத காலப்பகுதிக்குள் இ-தக்கசலாவையில் உட்சேர்ப்பதற்காக கல்வி அமைச்சுக்கு பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

**5.4 இ- தக்சலாவ தவிர பிற கற்றல்சார் கட்டமைப்பினை நடைமுறைப்படுத்தாதிருத்தல்**

பல்வேறு தனியார் நிறுவனங்கள், அரச,அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் நிறுவனங்களினால் மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக்கல்வி அலுவலகம், மாகாண மற்றும் தேசிய பாடசாலைகள், கணினி வளநிலையங்கள், ஆசிரியர் மத்திய நிலையங்கள் மற்றும் கல்வியியற் கல்லூரிகளில் அறிமுகப்படுத்துவதற்கு முன்வைக்கப்படுகின்ற பல்வேறு கற்றல்சார் முகாமைத்துவ முறைமைக்கு தாங்கள் தங்களது இணக்கப்பாட்டினை ஒருபோதும் பெற்றுக் கொடுக்காதிருத்தல் வேண்டும்.

அந்நிறுவனம். அமைப்பினால் பெற்றுக் கொடுக்கப்படும் யாதேனும் பாடத்துறை தொடர்பான விடயம் குறித்து சரியான மதிப்பீட்டு முறைமையின் கீழ் தரத்தினை உறுதி செய்து உரிய பரிந்துரையுடன் இ-தக்சலாவ கற்றல் சார் முகாமைத்துவ முறைமையினுள் உட்சேர்ப்பதற்காக கல்வி அமைச்சுக்கு அனுப்புதல் அவசியமாகும்.

விசேடமாக, கற்றல்சார் முகாமைத்துவ முறைமையில் இருக்கவேண்டிய பண்புகளுள் மிகவும் குறைந்தளவிலான பகுதிகளுடன் தனியான முறையினை உருவாக்குதல், நடாத்துதல், பாதுகாப்பு படிமுறைகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் தகவல்களை களஞ்சியப்படுத்தல் ஆகியவற்றின் பொருட்டு அவசியமற்ற வகையில் கடத்துகின்ற காலம், விரயம் போன்று அதற்காக ஈடுத்தப்படுகின்ற மனித வளங்களும் வீண் விரயமாகின்றது என்பனை அறிய முடிந்துள்ளது.

அத்துடன், அவ்வாறு ஆரம்பிக்கப்படுகின்ற அநேகமான முறைமைகள் குறுகிய காலத்தில் செயலற்றுப் போவதனூடாக கல்வி முறையானது கீழ்நிலை விமர்சனத்திற்கு உள்ளவாதாக அறியக் கிடைத்துள்ளது. தேசிய ரீதியில் சகல மாணவர்களும் பயன்படுத்தக் கூடிய பொது முறைமையின் வாயிலாக சகல விடயங்களையும் உள்ளடக்குவதன் மூலம் விசாலமான பரப்பினைக் கொண்ட கற்றல்சார் விடயங்கள் அனைத்தினையும் மாணவர்களுக்கு நீண்ட காலம் பயன்படுத்தக்கூடிய சந்தர்ப்பத்தினை இ-தக்சலாவ மூலம் வழங்கப்படுவதால் இதற்கமைய நடவடிக்கை மேற்கொள்வது கட்டாயமானதாகும்.

இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்படுள்ள ஆலோசனைக்கமைய நடவடிக்கை மேற்கொள்வதற்கு தங்களின் அலுவலர் குழாம், அதிபர்கள் உள்ளடங்கிய சகல உத்தியோகத்தர்களையும் அறிவுறுத்துதல் அத்தியாவசியமானது என்பதனை தங்களுக்கு மேலும் அறியத் தருகின்றேன்.

என்.எச்.எம். சித்ரானந்த,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

பிரதிகள் :-

1. கணக்காய்வாளர் நாயகம்
2. மாகாண பிரதம செயலாளர்கள்
3. சகல மேலதிகச்செயலாளர்கள்
4. மாகாண கல்விச் செயலாளர்கள்
5. பரீட்சை ஆணையாளர் நாயகம்
6. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
7. பணிப்பாளர் நாயகம்,தேசிய கல்வி நிறுவகம்
8. செயலாளர் நாயகம், இலங்கை யுனஸ்கோ தேசிய ஆணைக்குழு சபை
9. தலைவர், இலங்கை தகவல் தொழிநுட்ப முகவர் நிறுவனம் (ICTA)
10. தலைமை நிதி உத்தியோகத்தர்
11. சகல பிரதம கணக்காளர்கள்
12. பணிப்பாளர் நாயகம் (கணக்கு மற்றும் நிதி)